**செய்தி வெளியீடு எண்: 51** **நாள்: 23.01.2013**

**செய்தி வெளியீடு**

குழந்தை நலம் மற்றும் பாதுகாப்பு பணியில் முழுநேரமும் பணியமர்த்தப்பட்டுள்ள பல்வேறு குழந்தை இல்லங்களில் பணிபுரியும் அலுவலர்களின் தற்போதைய குடியிருப்பு கட்டடங்கள் மிகவும் சிதிலமடைந்து மற்றும் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளதால், அவற்றை இடித்து புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

அதன் அடிப்படையில் சென்னையிலுள்ள இரண்டு குழந்தை இல்லங்கள், இராணிப்பேட்டை, மல்லிபுதூர், தட்டப்பாரை, பஞ்சப்பள்ளி, தஞ்சாவூர், கடலூரிலுள்ள கூர்நோக்கு இல்லம் மற்றும் செங்கல்பட்டிலுள்ள அரசினர் சிறப்பு இல்லம் ஆகிய 9 இடங்களிலுள்ள பணியாளர் குடியிருப்புகளை இடித்து விட்டு புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் சென்னையில் இரண்டு இடங்களில் 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 39 குடியிருப்புகளும், ராணிப்பேட்டையில் 2 கோடியே 20 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 24 குடியிருப்புகளும், மல்லிபுதூரில் 1 கோடியே 73 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 18 குடியிருப்புகளும், தட்டப்பாரையில் 1 கோடியே 95 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 21 குடியிருப்புகளும், பஞ்சப்பள்ளியில் 1 கோடியே 63 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 17 குடியிருப்புகளும், தஞ்சாவூரில் 2 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 21 குடியிருப்புகளும், செங்கல்பட்டில் 1 கோடியே 90 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 20 குடியிருப்புகளும், கடலூரில் 54 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 6 குடியிருப்புகளும் என 166 பணியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்கும், அதற்காக 15 கோடியே 61 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 23.1.2013.